**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**D051 தமிழகக் கலைகள்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. புகார் நகர உப்பு வணிகர்கள் மருத நிலத்தில் உப்பை விற்று, அதற்கு விலையாகப் பெற்ற பொருள் யாது?
2. உலகில் மிக நீளமான பிரகாரத்தைக் கொண்ட கோயில் எது?
3. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக் கல் கோயில்களை மக்கள் எவ்வாறு அழைக்கின்றனர்?
4. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவன் யார்?
5. இராசசிம்மேசுவரம் என அழைக்கப்படும் கோயில் எது?
6. திருப்பரங்குன்றம் குடைவரை தற்போது எந்தக் கடவுளினுடைய கோயிலாக விளங்குகிறது?

7. ஒரு காலை நெற்றி வரை தூக்கி ஆடும் நடனத்தின் பெயர் என்ன?
8. சித்திரக் கலையில் சிறந்தவனாக விளங்கிய பல்லவ மன்னன் யார்?
9. பழந்தமிழகத்தில் பறை என்னும் தோற்கருவிக்கு வழங்கிய மற்றொரு பெயர் யாது?
10. 'தாண்டக வேந்தர்' என்பது யாரைக் குறிக்கும்?
11. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து யாருடைய உயிரைக் காத்தது?
12. யாழ் நூலின் ஆசிரியர் யார்?
13. சிலப்பதிகாரம் குறிப்பிடும் ஆடல்கள் எத்தனை?
14. வில்லுப்பாட்டுக் கலையில் முதன்மை பெறும் இசைக் கருவி எது?
15. கன்னையாவின் தசாவதார நாடகம் எத்தனை நாட்கள் நடைபெற்றுச் சாதனை படைத்தது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. காஞ்சி மாநகரின் அமைப்புப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் செய்திகள் யாவை?
2. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக் கல் கோயில்கள் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
3. மாமல்லபுரத்தில் அமைந்துள்ள பாறைச் சிற்பத்தின் அழகை விளக்குக.
4. விலங்குமுக மனித ஓவியங்களைப் பற்றி எழுதுக.
5. இசைக் கருவிகளின் அரசி என்று போற்றப்படும் வீணையின் தோற்றமும் அமைப்பும் பற்றி எழுதுக.
6. இசையரசியர் மூவர் என்று போற்றப்படுபவர்கள் யார்? அவர்கள் இசைக் கலைக்கு ஆற்றிய தொண்டினை எழுதுக.
7. பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடகக் கலைக்கு ஆற்றிய தொண்டுகளைக் குறிப்பிடுக.
8. இராமாயணக் கதையை மையமாகக் கொண்டு தோன்றிய நாட்டிய நாடகங்களைப் பற்றி எழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) நீர் ஆதாரங்களைப் பெருக்கும் வகையில் பழங்கால மன்னர்கள் ஆற்றிய செயல்களைக் கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்நாட்டுச் சிற்றூர்களில் காணப்படும் ஐயனார் கோயில்களைப் பற்றி விவரிக்க.

2. (அ) பிற்காலச் சோழர் சிற்பக் கலை பற்றிக் கூறப்படும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பற்றிக் கூறப்படும் கருத்துகளை எழுதுக.

3. (அ) தெருக்கூத்து நாடகம் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கரகாட்டம் பற்றிக் கூறப்படும் கருத்துகளை விரிவாக எழுதுக.